Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 84 | உள்ளூர் - 25.03.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 84 | வெளியூர் - 26.03.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

பூஜையறையில் செய்யக்கூடாத தவறுகள்?

ரயில் டிக்கெட்/ யுபிஐ விதிகளில் மேஜர் மாற்றம்?

அதிமுக முதல்கட்ட வேட்பாளர் பட்டியல்?

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## போர் பதற்றம்: அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு மத்தியஅரசு அழைப்பு... ராகுல்காந்தி புறக்கணிப்பு...!




டெல்லி, மார்ச். 25–

மத்திய கிழக்குப் போர் குறித்து விவாதிக்க இன்று (மார்ச் 25) மாலை 5 மணிக்கு அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மேற்காசிய போரின் தாக்கங்கள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் திங்கள்கிழமையும் (மார்ச் 23ந்தேதி), மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமையும் (மார்ச் 24ந்தேதி) பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது, 'மேற்காசிய போரால் எழுந்துள்ள உலகளாவிய கடினமான சூழல் நீண்ட காலம் நீடிக்க வாய்ப்புள்ளது. எனவே, கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தைப் போல தற்போதைய சூழலையும் ஒன்றுபட்டு எதிர்கொள்ள ஒட்டுமொத்த தேசமும் தயாராக வேண்டும். சாமானிய குடும்பங்களுக்கு கூடியவரை சிரமங்களைக் குறைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போதைய பிரச்னையில் இந்திய நாடாளுமன்றத்தில் இருந்து ஒருமித்த குரல் ஒட்டுமொத்த உலகுக்கும் ஒலிக்க வேண்டும். மேற்காசிய பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிக்கவும், மோதலை நிறுத்தவும் இந்தியா தொடர்ந்து முயற்சிக்கிறது' என்றார்.

அதேநேரம், ஈரான் மீதான அமெரிக்கா–இஸ்ரேலின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்காததற்காக, பிரதமர் மோடியை காங்கிரஸ் விமர்சித்தது. 'பிரதமரின் தற்பெருமை, கோழைத்தனம், பாரபட்சம் நிறைந்த வெற்று உரை' என்றும் அக்கட்சி சாடியது. இந்தச் சூழலில், மேற்காசிய நிலவரம் மற்றும் போரின் தாக்கங்கள் குறித்து விவாதிக்க இன்று புதன்கிழமை (மார்ச் 25) அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் பங்கேற்கவில்லை என்று வறப்படுகிறது.

இதனிடையே, நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, 'கேரளத்தில் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் என்னால் பங்கேற்க இயலாது' என்றார்.

## சிக்கிமில்

# கனமழை /கனத்த பனிப்பொழிவு எதிரொலி.. அடுத்தடுத்து பல நிலச்சரிவுகள்..

### 200 சுற்றுலாப் பயணிகளின் நிலை என்ன..?



சிக்கிம், மார்ச். 25–

கனமழையால் ஏற்பட்ட பல நிலச்சரிவுகளால் சாலைப் போக்குவரத்து தடைபட்டதால், வடக்கு சிக்கிமில் உள்ள சுங்தாங்கில் குறைந்தது 200 சுற்றுலாப் பயணிகள் சிக்கிக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து விவரங்களை அளித்த மங்கன் மாவட்ட ஆட்சியர் அனந்த் ஜெயின், செவ்வாய்க்கிழமை இரவு முக்கியமான சுங்தாங் –லாச்சென் வழித்தடத்தில் நிலச்சரிவுகள் ஏற்பட்டதாகவும், இதனால் லாச்சென் நோக்கிச் சென்ற சுற்றுலாப் பயணிகள் பாதியிலேயே சிக்கிக்கொண்டதாகவும் கூறினார்.சிக்கிக்கொண்ட பயணிகள் சுங்தாங்கில் உள்ள ITBP முகாம் மற்றும் ஒரு குருத்வாராவில் இரவு தங்க வைக்கப்பட்டனர் என்று அவர் கூறினார்.

எல்லை சாலைகள் அமைப்பின் (BRO) சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வானிலை நிலவரத்தைப் பொறுத்து, சாலைகள் பாதுகாப்பானவை என அறிவிக்கப்பட்ட பின்னரே அதிகாரிகள் நிலைமையை ஆய்வு செய்து பயணத்திற்கு அனுமதி அளிக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். சில சுற்றுலாப் பயணிகள் பின்னர் காங்டாக்கிற்குத் திரும்பி, தங்கள் பயணத் திட்டங்களை ரத்து செய்துவிட்டனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதனிடையே, செவ்வாய்க்கிழமை இரவு மூடப்பட்டிருந்த லாச்சுங் செல்லும் சாலை சீரமைக்கப்பட்டு, அப்பகுதியிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் புதன்கிழமை காலை பாதுகாப்பாக காங்டாக்கிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கடும் பனிப்பொழிவு காரணமாக முக்கிய சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டன.

இப்பகுதியில் விட்டுவிட்டு மழை பெய்து வருவதால், நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். 2023–ஆம் ஆண்டு ஏற்பட்ட பனிப்பாறை ஏரி உடைப்பு வெள்ளத்தில் (GLOF) கடுமையாக சேதமடைந்த லாச்சென் வழித்தடம், மார்ச் 9 அன்றுதான் மீண்டும் திறக்கப்பட்டது.

மேலும், கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனத்த பனிப்பொழிவு காரணமாக, சோம்கோ ஏரி மற்றும் நாதுலா போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டே இருக்கின்றன.

## சிலிண்டர் வழங்குவது மாநில அரசின் கையிலா உள்ளது? மத்திய அரசுக்கு மு.க.ஸ்டாலின் கேள்வி!



சென்னை, மார்ச். 25–

திமுக தலைவரும் தமிழக முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது: "கோவிட் காலத்தைப் போல" என பிரதமர் பேசியதால், ஏற்கெனவே எரிவாயு தட்டுப்பாட்டால் தவிக்கும் மக்கள் மேலும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர். பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.தீவிர நடவடிக்கைகள் மூலம் இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய ஒன்றிய பா.ஜ.க. அரசு இதில் இருந்து செய்திகளைத் திசைதிருப்புவதற்காகவே தொகுதி மறுவரையறை script–ஐத் தற்போது கையிலெடுத்துள்ளது.

பா.ஜ.க. ஜாடிக்கு ஏற்ற மூடியாக, மக்கள் பிரச்சினையை மறந்தும் பேசமாட்டோம் எனத் தங்களுக்குத் தாங்களே வாய்ப்பூட்டு போட்டுக்கொண்டுள்ள அ.தி.மு.க.வோ, மாநில அரசு என்ன செய்கிறது எனக் கேட்கிறார்கள்.சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது? மாநில அரசு தன்னால் இயன்ற அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. "இத்தனைக்கும் பொறுப்பான ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன செய்கிறது?" என்பதே மக்கள் முன்வைக்கும் கேள்வி.." என்று தெரிவித்துள்ளார்.

## வங்கிகளில் உரிமை கோரப்படாத ரூ.60 ஆயிரம் கோடி ரிசர்வ் வங்கிக்கு மாற்றம்!




புதுடெல்லி, மார்ச். 25–

இந்தியாவின் பல்வேறு வங்கிகளில் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் கிடந்த ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் தற்போது இந்திய ரிசர்வ் வங்கிக்கு மாற்றப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாத இறுதி நிலவரப்படி, பொதுத்துறை வங்கிகளில் இருந்து உரிமை கோரப்படாமல் இருந்த மொத்த வைப்புத்தொகை ரூ.60,518 கோடி அளவாக உயர்ந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது. இது தொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய நிதித்துறை இணை மந்திரி பங்கஜ் சவுத்ரி அளித்த எழுத்துபூர்வ பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:

2026, ஜனவரி இறுதி வரையிலான நிலவரப்படி, பொதுத் துறை வங்கிகளில் இருந்து ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர்கள் விழிப்புணர்வு நிதிக்கு மாற்றப்பட்ட உரிமை கோரப்படாத வைப்புத்தொகை ரூ.60,518 கோடியாகும். பிப்ரவரி இறுதி வரையிலான நிலவரப்படி, காப்பீடுதாரர்களால் உரிமை கோரப்படாத காப்பீட்டுத் தொகை ரூ.8,973.89 கோடி. இதேபோல், செபி ஒழுங்குமுறைகளின்கீழ், பரஸ்பர நிதியில் முதலீட்டாளர்களால் உரிமை கோரப்படாத தொகையின் மதிப்பு ரூ.3,749.34 கோடியாக உள்ளது. உரிமை கோரப்படாத வைப்புத்தொகைக்கு சொந்தமான வாடிக்கையாளர்களை விரைந்து அடையாளம் காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

## "மின்னணு ஆவணங்களைக் காண்பித்தால் கூட போதும்" - தலைமைத் தேர்தல் அதிகாரி!



சென்னை, மார்ச். 25–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் கையேடு என்ற நூலைத் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியும், அரசு செயலாளருமான அர்ச்சனா பட்நாயக் சென்னை ராயப்பேட்டையில் இன்று (25.03.2026) வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தார். அப்போது அவர் பேசுகையில், "மருத்துவ காரணங்களுக்காக 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பணம் கொண்டு செல்லும்பட்சத்தில் வாட்ஸ்அப் உள்ளிட்ட மின்னணு வாயிலாக வழியாக உரிய ஆவணங்களைக் காண்பித்தால் கூட போதும். இது குறித்து ஊடகங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## எரிபொருள் விநியோக தட்டுப்பாடு.. முதல் நாடாக 'அவசர நிலை' பிரகடனத்தை அறிவித்தது பிலிப்பைன்ஸ்!



மணிலா, மார்ச். 25–

வளைகுடா பிராந்தியத்தில் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பதிலடி நடவடிக்கையாக ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டது. இந்த தாக்குதல்களில் ஈரானில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததாகவும், பிற நாடுகளில் 200–க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹார்முஸ் நீரிணையை திறக்காவிட்டால் அங்குள்ள எரிசக்தி அமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார். இதற்கு பதிலளித்த ஈரான், வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், மின்சார அமைப்புகள் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்துவோம் என தெரிவித்தது. இந்த நிலையில், ஈரான் மீதான தாக்குதலை 5 நாட்களுக்கு ஒத்திவைப்பதாக டிரம்ப் அறிவித்தார். பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார். இதனிடையே மேற்கு ஆசியாவில் 3 வாரங்களுக்கும் மேலாக நீடித்து வரும் போரால் கடுமையான உலகளாவிய எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன்படி பெட்ரோல், டீசல், கியாஸ் மற்றும் உரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் வழக்கமான வினியோகத்தை பாதித்துள்ளது.

இந்நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் உலகின் முதல் நாடாக பிலிப்பைன்ஸ் அரசு அவசர நிலை பிரகடனம் செய்துள்ளது. பிலிப்பைன்ஸ் அரசு 98 சதவீத கச்சா எண்ணெயை மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வாங்குவதால், மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிவரும் போரால் பெட்ரோல், டீசலின் விலை அந்நாட்டில் இருமடங்கு அதிகரித்துள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க, அந்நாட்டு அதிபர் பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் நாடு முழுவதும் தேசிய எரிசக்தி அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளார். நாட்டின் தற்போதைய கையிருப்பு வெறும் 45 நாட்களுக்கு மட்டுமே போதுமானது என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளதால், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர நிலையைத் தொடர்ந்து, உணவு, மருந்து மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய ஒரு சிறப்புக் குழுவை அந்நாட்டு அரசு அமைத்துள்ளது. எரிபொருள் இருப்பை உடனடியாக அதிகரிக்க, பெட்ரோலியப் பொருட்களை நேரடியாகக் கொள்முதல் செய்யும் அதிகாரத்தை அரசு தனது கையில் எடுத்துள்ளது. மேலும், எரிவாயு விலை உயர்வால் மின் கட்டணம் அதிகரிப்பதைத் தவிர்க்க, தற்காலிகமாக நிலக்கரி சார்ந்த மின் உற்பத்தி நிலையங்களையே அதிகம் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தலையங்கம் மதுரை மணி
புதன்கிழமை 25.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 11-ம் தேதி

# ஏஐ உருவாக்கிய புதிய பொருளாதாரம்..!



ஐடி முதல் உற்பத்தி வரை, ஹோட்டல் முதல் பள்ளி வரையில் பல்வேறு வேலைகளை செயற்கை நுண்ணறிவு (AI) முற்றிலும் மாற்றிவிடும், மாற்றிக்கொண்டும் இருக்கிறது. ஆனால் இந்த AI வளர்ச்சியில் பெரும்பாலானோர் கவனிக்காத ஒரு முக்கிய பொருளாதார சிக்கல் உள்ளது. ஏஐ மற்றும் ரோபோடிக்ஸ் இணைந்தால் 100க்கு 90 வேலைகளை இயந்திரங்களால் செய்ய முடியும் என்ற நிலையில்.. மக்கள் அவர்கள் செய்யும் வேலைகளை இழப்பது போன்ற பிரச்சனை மட்டும் அல்லாமல்; வேலைகள் இல்லாமல் போனால் மக்கள் வருமானத்திற்கு என்ன செய்வார்கள், வருமானம் இல்லாவிட்டால் வர்த்தகம் என்னாகும், பொருளாதாரம் என்னாகும் என்ற கேள்வி தற்போது மிகப்பெரியதாக உள்ளது. ஒரு பொருளாதாரம் இயங்குவதற்கான அடிப்படை, உற்பத்தி மற்றும் நுகர்வு. ஆனால் AI அனைத்து வேலைகளையும் மாற்றி, மனித உழைப்பு இல்லாமல் பொருட்கள் தயாரிக்க ஆரம்பித்தால், உற்பத்தி அதிகரிக்கும். ஆனால் அதே நேரத்தில், வேலை இல்லாத மக்களுக்கு வருமானம் இல்லாததால் அவர்கள் அந்த பொருட்களை வாங்க முடியாது.

இதனால் 'அதிக உற்பத்தி – குறைந்த நுகர்வு' என்ற நிலை உருவாகி, பொருளாதாரம் சீர்குலையும் அபாயம் உள்ளது. இது உற்பத்தி குறைவால் அல்ல, விற்பனை செய்யவும், வாங்கவும் யாரும் இல்லாததால் ஏற்படும் பிரச்சனை. இந்த சிக்கல் புதியது அல்ல. 1930களில் பொருளாதார நிபுணர் John Maynard Keynes தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக 'technological unemployment' உருவாகும் என்று முன்கூட்டியே கணித்தார். அதாவது, இயந்திரங்கள் மனிதர்களின் வேலைகளை மாற்றும் நிலை. IT மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் இது ஒரு கட்டம் வரையிலான தாக்கத்தை ஏற்படுத்தினாலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ஆனால், இன்று AI வளர்ச்சியால் அந்த கணிப்பு முழுமையாக நிஜமாகும் நிலையில் உள்ளது. AI துறையில் செயல்படும் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் தற்போது ஒரு முக்கிய கேள்வியை விவாதித்து வருகின்றனர்: வேலைகள் இல்லாமல் போனால் வருமானம் எப்படி உருவாகும்? இதற்கான இரண்டு முக்கிய தீர்வுகள் உலகளவில் பேசப்படுகின்றன.

1. Universal Basic Income – அனைவருக்கும் அடிப்படை வருமானம் இந்த முறைப்படி, அரசு AI நிறுவனங்களுக்கு வரி விதித்து அந்த பணத்தை மக்களிடம் பகிரும். இதன் மூலம் வேலை இல்லாவிட்டாலும் மக்கள் ஒரு அடிப்படை வருமானத்தை பெற முடியும். Sam Altman இந்த கருத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் உலகின் மிகப்பெரிய Universal Basic Income ஆய்வை நடத்தினார். இதில் 1,000 பேருக்கு மாதம் 1,000 டாலர் அளவில் மூன்று ஆண்டுகள் வழங்கப்பட்டது. இந்த மாதிரி முயற்சிகள் எதிர்கால பொருளாதார அமைப்பை உருவாக்கும் அடித்தளமாக பார்க்கப்படுகின்றன

. 2. Universal Basic Ownership – சொத்து உரிமை பகிர்வு இரண்டாவது தீர்வு இன்னும் வித்தியாசமானது. பணம் கொடுப்பதற்குப் பதிலாக, மக்களுக்கு நிறுவனங்களில் பங்கு உரிமை வழங்கப்படும். இதன் மூலம் மக்கள் நேரடி சம்பளம் பெறாமல், நிறுவன லாபத்தில் இருந்து டிவிடென்ட் பெறுவார்கள். ஓப்பன்ஏஐ நிறுவனத்தின் தலைவர் Sam Altman உருவாக்கிய 'American Equity Fund' திட்டத்தின் மூலம் பெரிய நிறுவனங்கள் தங்களின் ஒரு பகுதியை பொதுமக்களுக்கு வழங்கலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த முறை, மக்கள் 'ஊழியர்கள்' அல்ல, 'பங்குதாரர்கள்' ஆக மாறும் ஒரு புதிய பொருளாதார அமைப்பை உருவாக்கும்.

AI உலகில் புதிய வருமான முறை – 'Universal High Income' எலான் மஸ்க் இந்த மாற்றத்தை 'Universal High Income' என குறிப்பிடுகிறார். AI மற்றும் ரோபோட்டுகள் அனைத்து உற்பத்தியையும் மேற்கொள்ளும் நிலையில், பொருட்கள் மற்றும் சேவைகளில் பற்றாக்குறை இருக்காது. அந்த சூழலில், மனிதர்களின் முக்கிய தேவை 'வருமானம்' அல்ல, 'வாழ்க்கையின் பொருள்' ஆக மாறும் என அவர் வலியுறுத்துகிறார்.

**வேலை – வருமானம் உறவு :**

பல நூற்றாண்டுகளாக 'வேலை செய்தால் வருமானம்' என்ற அடிப்படையில் இயங்கிய பொருளாதார அமைப்பு, AI வளர்ச்சியால் வருமானத்தின் அடிப்படை மாறப்போகிறது. இனி வேலை செய்வது மட்டுமே வருமானத்தின் மூலமாக இருக்காது. அதற்கு பதிலாக, அரசின் ஆதரவு அல்லது நிறுவனங்களின் உரிமை பகிர்வு மூலம் வருமானம் கிடைக்கும் புதிய அமைப்பு உருவாகும்.

**புதிய பயம்..**

AI வேலைகளை மாற்றும் என்ற பயத்தை விட, அது உருவாக்கும் புதிய பொருளாதார அமைப்பை புரிந்து கொள்வது முக்கியம். வருமானம் உருவாகும் முறை மாறும் இந்த காலத்தில், உலகம் ஒரு பெரிய மாற்றத்திற்குள் நுழைகிறது. இந்த மாற்றம் சவாலாக இருக்கலாம், ஆனால் அதே நேரத்தில் புதிய வாய்ப்புகளையும் உருவாக்கும். மனிதர்களின் பங்கு வேலை செய்வதில் மட்டும் அல்ல, பொருளாதாரத்தின் உரிமையாளர்களாக மாறுவதிலும் இருக்கலாம்.

# ஏப்ரல் 1 முதல் UPI கட்டண விதிகளில் முக்கிய மாற்றம்: RBI




புதுடெல்லி, மார்ச். 25–

வழக்கமாக ஒரு புதிய மாதம் தொடங்கும்போது, நிதி ஒழுங்குமுறைகளில் பல முக்கிய மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்நிலையில், ஆன்லைன் பணம் செலுத்துதல் தொடர்பான சில மாற்றங்கள் ஏப்ரல் 2026 முதல் நடைமுறைக்கு வர உள்ளன. இந்திய ரிசர்வ் வங்கி (RBI), மக்கள் மோசடி யிலிருந்து தங்கள் பணத்தை சிறப்பாகப் பாதுகா த்துக்கொள்ள, கடுமையான புதிய விதிகளை இயற்றி யுள்ளது. இனி அனைத்து ஆன்லைன் பணம்செலுத்து தல்களுக்கும் இரு காரணி அங்கீகாரம் (Two–factor authentication) கட்டாயமாக்கப்படும்.

**இனி ஆன்லைன் பண பரிமாற்றங்களுக்கு 2FA அவசியம்**

ஆன்லைன் முறையில் பண பரிமாற்றம் செய்யும் நபர்களுக்கு கடவுச்சொல்லை மட்டும் உள்ளிடுவதோ அல்லது பழைய OTP–ஐ உள்ளிடுவதோ மட்டும் இனி போதுமானதாக இருக்காது. தற்போது, யுபிஐ, கிரெடிட்/டெபிட் கார்டுகள், நெட் பேங்கிங் அல்லது வாலெட்டுகள் மூலம் பணம் செலுத்தும் போது பலர் வெறுமனே OTP–ஐ உள்ளிடுகின்றனர், ஆனால் இது ஏப்ரல் 1, 2026 முதல் மாறும்.

**குறைந்தபட்சம் இரண்டு சரிபார்ப்பு முறைகள் தேவை**

– புதிய விதிகளின்படி, ஒவ்வொரு முறை பணம் செலுத்தும் போதும், குறைந்தபட்சம் இரண்டு சரிபார்ப்பு முறைகள் தேவைப்படும்.

– இந்த முறைகளில் ஒன்று டைனமிக் (ஒவ்வொரு முறையும் புதியது) ஆக இருக்க வேண்டும்.

– அதாவது மொபைல் பின், யுபிஐ பின், கைரேகை, ஃபேஸ் ஐடி (பயோமெட்ரிக்), டைனமிக் OTP, கடவுச்சொல் மற்றும் பயோமெட்ரிக் போன்றவை. சிறிய தொகைகளைக் கொண்ட வழக்கமான பணம் செலுத்துதல்கள் குறைந்தபட்ச ஆய்வுக்கு உட்படுத்தப்படும். – ஆனால் பெரிய தொகைகள் அல்லது சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகள் கூடுதல் சரிபார்ப்புக்கு உட்படுத்தப்ப டும்.

– இது இடர் அடிப்படையிலான அங்கீகாரம், அதாவது ரிஸ்க் பேஸ்ட் அதெண்டிகேஷன் என்று அழைக்கப்படுகிறது.

இந்த விதிகள் அனைத்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கும் பொருந்தும்

இந்த விதிகள் நாட்டிற்குள் செய்யப்படும் அனைத்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கும் (UPI, கார்டுகள், நெட் பேங்கிங் மற்றும் ப்ரீபெய்ட் கட்டண முறைகள்) பொருந்தும். வெளிநாட்டு இணையதளங்கள் அல்லது செயலிகள் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு, இந்த விதிகள் அக்டோபர் 1, 2026 முதல் அமலுக்கு வரும். டிஜிட்டல் பரிவர்த்தனைகள் வேகமாக வளர்ந்து வருவதாகவும், அதே நேரத்தில் மோசடி மற்றும் ஹேக்கிங் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகவும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) கூறியுள்ளது. பழைய SMS OTP இனி பாதுகாப்பானதாக கருதப்படுவதில்லை. ஏனெனில் ஹேக்கர்களால் அவற்றை எளிதாக அணுக முடிகின்றது. ஆகையால், வலுவான பாதுகாப்பு தேவைப்படுகிறது. இந்த புதிய விதிகள் ஃபிஷிங், அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் மற்றும் ஆன்லைன் மோசடிகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சாமானிய மக்கள் மீதான தாக்கம் எப்படி இருக்கும்?**

மோசடி நிகழ்ந்து, வங்கி அல்லது கட்டண நிறுவனம் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றத் தவறினால், வங்கி வாடிக்கையாளருக்கு எந்த இழப்பும் ஏற்படாது. வங்கி முழுத் தொகையையும் திருப்பிக் கொடுக்க வேண்டும். இப்போது பொறுப்பு வங்கி அல்லது நிறுவனத்தைச் சார்ந்தது, வங்கி வாடிக்கையாளருடையது அல்ல. ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பின் (PIN), கைரேகை அல்லது OTP பயன்படுத்துதல் மற்றும் UPI மூலம் பணம் செலுத்தும்போது பயோமெட்ரிக்ஸ் போன்ற சில கூடுதல் படிகள் தேவைப்படலாம். இது உங்கள் பாதுகாப்பிற்காகவே.

சிறு கடைக்காரர்களும் ஆன்லைன் வாடிக்கையாளர்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். மேலும், வங்கிகள் மற்றும் Paytm, Google Pay, PhonePe போன்ற நிறுவனங்கள் தங்கள் அமைப்புகளைப் புதுப்பிக்கவும், புதிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவும், பரிவர்த்தனைக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும் வேண்டியிருக்கும்.

ஏப்ரல் 1, 2026–க்குள் அப்டேட் செய்வது அவசியம்

ஏப்ரல் 1, 2026–க்குள், உங்கள் வங்கிச் செயலி அல்லது UPI செயலியைப் புதுப்பித்து வைத்துக்கொள்வதுடன், எளிதான முறையில் பணம் செலுத்துவதற்கு ஏதுவாக உங்கள் பயோமெட்ரிக் (கைரேகை அல்லது முக அடையாளம்) வசதியையும் இயக்கி வைத்திருப்பது மிக அவசியம். உங்கள் PIN, OTP அல்லது கடவுச்சொல்லை ஒருபோதும் யாருடனும் பகிர்ந்துகொள்ளாதீர்கள். மேலும், சந்தேகத்திற்குரிய செய்திகள் அல்லது இணைப்புகளைக் கிளிக் செய்யாதீர்கள். டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் பாதுகாப்பானதாகவும் அதே சமயம் எளிமையானதாகவும் இருப்பதை உறுதி செய்வதே RBI–இன் நோக்கமாகும். இது நீண்ட கால அடிப்படையில் உங்கள் பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும்.

# பழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திரம் திருவிழா கொடியேற்றம்!



பழனி, மார்ச் 25–

பழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திரம் திருவிழா மார்ச் 26 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. பழனியில் புகழ்பெற்றது பங்குனி உத்திரம் திருவிழாவாகும். இத்திருவிழா பத்து நாட்கள் நடைபெறும்.

திருவிழாவின் முக்கிய அம்சமே பக்தர்கள் கொடுமுடி காவிரி ஆற்றில் சிறு சிறு குடங்களில் நீரை சேகரித்து, பின்பு அதை தீர்த்த காவடியாக மேளதாளம் முழங்க, பழனிக்கு எடுத்து வருவார்கள். பின்பு தீர்த்தக் காவடி நீரை பழனி முருகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு செய்வார்கள். நாளை மார்ச் 26 ஆம் தேதி வியாழக்கிழமை பழனி திருஆவினன்குடி முருகன் கோயிலில் காலை 9 மணிக்கு மேல் 10:30 மணிக்குள், ரிஷப லக்னத்தில் கொடியேற்றம் நடைபெறுகிறது. வரும் 31 ஆம் தேதி முருகன் வள்ளி தெய்வானை திருக்கல்யாணம் நடைபெறுகிறது. வரும் ஏப்ரல் 1ஆம் தேதி பங்குனி உத்திரம் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. இதற்கான விழா ஏற்பாடுகளை, பழனி கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேசன், உதவி ஆணையர் செந்தில்குமார் ஆகியோர் செய்து வருகின்றனர்.

# காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதி...!




டெல்லி, மார்ச். 25–

79 வயதான சோனியா காந்தி தற்போது ராஜ்யசபா எம்பியாக உள்ளார். இவர் வயது முதிர்வு காரணமாக அவ்வப்போது உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறது. ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் சுவாச பிரச்சினைகள் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். இந்த நிலையில், நேற்று இரவு (மார்ச் 24) மீண்டும் டெல்லி கங்காராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தகவல் அறிந்த அவரது மகனும் லோக்சபா எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி மற்றும் மகள் பிரியங்கா காந்தி வத்ரா ஆகிய இருவரும் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்தனர்.தாயாரை சந்தித்து உடல் நலம் விசாரித்த ராகுல் காந்தி சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

# திருப்பரங்குன்றம் முருகனின் கைகளில் உள்ள தராசு நீதி தேவதையின் சின்னமா?

திருப்பரங்குன்றம் முருகனின் கைகளில் உள்ள தராசு நீதி தேவதையின் சின்னமா? பார்வைகள்:– தினமலரில் வந்த திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கையில் தராசுடன் திருத்தேரில் இருக்கும் புகைப்படம். முருகப்பெருமான் திருவுருவங்கள் பலவிதமாக புராணங்கள், சிற்ப சாஸ்த்திரங்களில் கூறப்பட்டுள்ளதை காணலாம்.

ஆனால் இது போன்ற வடிவம் எங்கும் பார்க்க முடியாது. புராணங்களில் திருப்பரங்குன்றம் முருகனின் ஆலயத்தில் தேர் ப்ரம்மா வால், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் தேர் திருவிழாவும், ஹரிச்சந்திர அரசனால் தை மாதம் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் திருவிழா தொடங்கி புனர்பூசத்தில் தேரும் அடுத்த நாள் பூச நட்சத்திரத்தில் தீர்த்தம் எனும் திருவிழா நிறைவு நடைப்பெற்றது.


வைகாசி விசாகம் நட்சத்திரத்தில் முருகனை வழிபடுவது ஒரு சிறப்பு ஆகும். ஜோதிட சாஸ்திரத்தின் படி இந்த நட்சத்திரத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதி ( மூன்று பாதங்கள்) எனும் பகுதி துலாம் எனும் தராசு symbol உடைய ராசியில் வருகிறது.

தற்போது கோவிலில் உள்ள மரத்தாலான பெரிய தேரில் இந்த துலா எனும் தராசை ஏந்திய வடிவம் உள்ளது. இந்த வடிவம் காவடி வடிவத்தின் ஒரு அம்சம். முருகனுக்கு காவடி எடுத்து பிரார்த்தனை செலுத்துதல் என்பது தொன்றுதொட்டு வரும் தமிழர்களின் மரபு. பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்ப காவடி, பறவை காவடி என்று பலவிதம் பக்தர்களால் எடுக்கப்படுகிறது. இந்த மாதிரியான காவடி நகரத்தார்களால் பல தலைமுறையாக தேவகோட்டை எனும் ஊரிலிருந்து பழனிக்கு பல தலைமுறையாக, காலம் காலமாக சமூகமாக எடுத்து வந்து பழனி தண்டாயுதபாணி கடவுளுக்கு பிரார்த்தனை செலுத்தப்படுகிறது. தமிழ்நாடு பக்தர்கள் மட்டுமின்றி கேரளா, ஸ்ரீலங்கா முதல் உலகத் தமிழர்கள் வரை காவடி எடுத்து வந்து வழிபடுகிறார்கள். இப்பொழுது இந்த காவடி எடுக்கும் நடைமுறை பழக்கம் எங்கிருந்து வந்தது என்பதை பார்ப்போம். இடும்பன் என்பவன் சூரபத்மன், சிங்கமுகன்,தாரகன் இவர்களுக்கு வில்வித்தை கற்றுத்தந்த ஆசான். மூவரின் சம்ஹாரத்திற்கு பிறகு இடும்பன் தன் மனைவியுடன் மஹேந்திர புரியலை விட்டு வேறு இடத்திற்கு சென்றான். வழியில் பொதிகை மலையில் தமிழ் முனி அகத்தியரை சந்தித்து உபாயம் கேட்டான். அவரோ கேதார்நாத் அருகில் இருக்கும் சக்திகிரி சிவகிரி எனும் இரண்டையும் எடுத்து வந்து பொதிகை மலையின் அடியில் வைக்க வலியுறுத்தி சில மந்த்ரோபதேசமும் செய்தார். அதன்படியே அங்கு சென்ற இடும்பன் இடும்பி அந்த மலையை அகத்தியர் அருளிய மந்திரத்தை பயன்படுத்தி ப்ரம்ம தண்டம் எனும் ஒரு தண்டத்தையும் வாசுகி எனும் அஷ்ட நாகத்தை ( பாம்பை) கயிறாகவும் பயன்படுத்தி இரண்டு மலையையும் தண்டத்தின் இரு முனையிலும் கட்டி ( காவடி போல்) தூக்கி வந்து அமைந்த இடமே பழனி மலை ஆகும். பழனி முருகன் இடும்பனின் செருக்கை அழித்து அவர்களை அனுக்கிரகம் செய்த தலமே பழனி. அந்த வனமே இடும்ப வனம் எனப் பெயர் பெற்றது. அந்த மலையே சிவ சக்தி வடிவமாகும் . அதன் தொடர்ச்சியே இந்த காவடி ஏந்தி வரும் மரபு. அறிவு எனும் சிவத்தையும் உழைப்பு எனும் சக்தியையும் இரு தராசு தட்டாக நடுவில் இருக்கும் கொம்பு ( மரக்குச்சி) தண்டு என்பது மனதாக, இரண்டுக்கும் நடுவில் சமமாக பிடித்து தூக்கி வந்தால் தான் ( நடுவு நிலைமை) Neutral ஆக இருந்தால் ( பெரியவர்–சிறியவர், வறியவர்– எளியவர், இருப்பவர் – இல்லாதவர், கற்றோன்– கல்லாதவன், அதிகாரம் உள்ளவன் – அதிகாரம் இல்லாதவன், அரசன் – ஆண்டி என்ற பேதமின்றி நடுவு நிலையோடு ஆண்டவன் அனைவரையும் நடத்துகிறான், ஆட்சி புரிகிறான், நீதி பரிபாலனம் செய்கிறான் என்பதை உணர்த்த வந்த அடையாள குறிப்பு சின்னமே இந்த தராசு எனும் திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கையில் உள்ள காவடி. நாம் சேரும் இடத்தை இலட்சியத்தை இடர்கள் இன்றி அடைய முடியும் என்பதை உணர்த்துவதாக எடுத்துக் கொள்ளலாம். எப்பொழுதும் உண்மையே பேசக்கூடிய, உண்மையை விட உயர்ந்தது வேறு எதுவுமே இல்லை என்று தன் வாழ்க்கையின் மூலம் மக்களுக்கு உணர்த்திய அரசன் ஹரிச்சந்திரன். அவர் இங்கு வந்து தரிசித்து திருத்தேர் செய்து அனுக்கிரக ம் பெற்ற இடம் திருப்பரங்குன்றம் முருகப்பெருமான். இங்கே தான் ப்ரணவம் எனும் "ஓம்" எனும் பதத்திற்கு தந்தையிடம் பொருள் கேட்டு தந்தைக்கே உபதேசித்த சுவாமிநாதனுக்கு சத்யகிரீஸ்வரராக சத்தியத்தின் வடிவமாக மலையே லிங்கமாகவும், காட்சி அளித்தவர். புராண காலங்களிலும் கடந்த காலத்திலும் , இப்பொழுதும், எப்பொழுதும் திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் சுவாமி நாதனின் கையில் துலாம் எனும் தராசு ஏந்தி நீதிபரிபாலனம் செய்யும் நீதி அரசனாக இருந்து மக்களாகிய பக்தர்களை வழிநடத்திக் கொண்டு வருகிறான். நீதிமன்றங்களில் உள்ள நீதி தேவதை சிலை கிரேக்க ரோமானிய காலத்து வழக்கம். இந்த சிலை இந்தியாவில் 1872 ம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள உயர்நீதிமன்றத்தில் நிறுவப்பட்டது.

கண்கள் கட்டப்பட்ட நீதி தேவதை – பணம், அந்தஸ்து, அதிகாரம் பார்க்காமல் நடுநிலையோடு நீதிபரிபாலனம் செய்வதை குறிக்கிறது. தராசு தட்டு– இரண்டு தரப்பு நியாயங்களையும் ஆய்வு செய்து சமநிலையை நிலை நாட்டுவது. கையில் உள்ள வாள் – அநீதியை தண்டிப்பதையும், அதிகாரத்தை நிலை நிறுத்துவதையும் குறிக்கும் ஒரு குறியீடு ஆகும். இப்பொழுது நீதித் துறையில் நீதி தேவதையின் அடையாளமாக பார்க்கப்படும் கையில் தராசுடன் இருக்கும் நீதிதேவதை கையில் இருக்கும் தராசின் இரண்டு தட்டு – இருதரப்பு நியாயங்களையும் ஆராய்ந்து சமநிலையை நிலை நாட்டுவது. புதிய கண்கள் திறந்த நிலையில் உள்ள நீதி தேவதை சட்டம் குருடல்ல நீதி வெளிப்படையானது என்பதையும், சட்ட புத்தகம் – ஜனநாயகத்தில் அரசியலமைப்பு சாசனமே உயர்ந்தது என்பதை குறிப்பதாகும். நீதி அரசர்கள் மக்களால் நீதி தேவதைகளாகவே இறைவனின் வடிவமாகவே பார்க்க படுகிறார்கள். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று சொன்ன தெய்வத் தமிழ் சங்கம் புலவன் நக்கீரனார் வாதம் செய்த மண். கண்ணகி வரலாற்றில் யானோ மன்னன் யானே கள்வன் என்ற நீதிக்கு உயிர் துறந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் மண். வன்னியும் கிணறும் சாட்சி சொன்ன முதல் பாரதீய சாட்சிய சட்டம் ( Indian evidence act) ஐ உலகுக்கு தந்த மண். எளியவருக்காக பிட்டுக்கு மண் சுமந்து தன் உடம்பில் பிரம்படியை வாங்கிக் கொண்ட சொக்கநாதர். தொழிலாளிகளுக்காக போராடி வெற்றி பெற்ற முதல் தொழிற்சங்க தலைவர் மதுரை மண்ணின் இறைவன் .தென்னாட்டுடைய சிவனே என்னாட்டவர்க்கும் இறைவன் என்று உணர்த்திய மாபெரும் தலைவன். பல அருளாளர்கள் பிறந்த ஆட்கொண்ட மண் இந்த மதுரை மண். இதில் பிறந்து வாழ்வதில் பெருமை கொள்வோம். சத்யமேவ ஜெயதே. நீதியே வெல்லும். நீதியே இறைவன். நன்றி .

இப்படிக்கு

**எஸ்.சங்கரன்** வழக்கறிஞர், மதுரை



# பூஜையறையில் செய்யக்கூடாத தவறுகள்?



இந்து மரபில், வீடானது ஒரு கோவிலாகவே கருதப்படுகிறது. அதில், பூஜை அறையானது மிகவும் புனிதமான ஒரு சக்தி மையமாகப் போற்றப்படுகிறது. தினமும் விளக்கேற்றி, ஊதுபத்தி ஏற்றி வழிபடுவதன் மூலம் வீட்டில் நேர்மறை ஆற்றல் பெருகும் என்று நம்பப்படுகிறது. இருப்பினும், பூஜை செய்யும்போது நாம் செய்யும் சிறிய தவறுகள், பெரிய வாஸ்து குறைபாடுகளுக்கு வழிவகுக்கக்கூடும் என்று வாஸ்து நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக, பூஜை அறையில் தீப்பெட்டியை வைப்பது தொடர்பான ஒரு தகவல் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

சமயச் சடங்குகளின்படி, விளக்கேற்றுவதற்குத் தீப்பெட்டி அவசியமான ஒன்றாகும்; ஆனால், அந்தத் தீப்பெட்டியை எங்கு வைக்க வேண்டும் என்பது குறித்து வாஸ்து சாஸ்திரம் சில முக்கிய வழிகாட்டுதல்களை வழங்குகிறது. பூஜை அறையானது அமைதி மற்றும் சாந்தத்தின் அடையாளமாகத் திகழ்கிறது. ஆனால் தீப்பெட்டியோ, எளிதில் தீப்பற்றக்கூடிய ஒரு பொருளாகும்; இது நெருப்புத் தனிமத்தையும், அதன் தீவிரத் தன்மையையும் குறிக்கிறது. இத்தகைய பொருட்களைப் புனிதமான தெய்வத் திருவுருவங்களுக்கு அருகில் வைப்பது, அந்த இடத்தின் ஆன்மீகப் பலன்களைக் குறைத்துவிடும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.


வாஸ்து தோஷம்:

பூஜை அறையில் தீக்குச்சிகள் அல்லது லைட்டர்களை வெளிப்படையாக வைத்திருப்பது 'வாஸ்து தோஷத்தை' (வாஸ்து குறைபாட்டை) ஏற்படுத்தும். இது வீட்டின் பொருளாதார நிலையைப் பாதிப்பது மட்டுமல்லாமல், குடும்ப உறுப்பினர்களிடையே மன அமைதியின்மையையும் உருவாக்கக்கூடும்.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, பூஜை அறைக்கு மட்டுமல்லாமல், வீட்டின் பிற பகுதிகளுக்கும் சில குறிப்பிட்ட விதிகள் பின்பற்றப்பட வேண்டும். குறிப்பாக, படுக்கையறையில் தீபங்களை (விளக்குகளை) அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை வைப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். படுக்கையறையில் இத்தகைய பொருட்களை வைத்திருப்பது, கணவன்–மனைவிக்கு இடையே தேவையற்ற சண்டைகளுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் வழிவகுக்கும். இது வீட்டில் பதற்றத்தை அதிகரித்து, தூக்கமின்மை போன்ற உடல்நலப் பிரச்சினைகளை உருவாக்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

தீப்பெட்டி என்பது ஒரு அத்தியாவசியப் பொருள் என்பதால், வாஸ்து குறைபாடுகளைத் தவிர்க்கப் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பூஜை அறையில் உள்ள தெய்வத் திருவுருவங்களுக்கு நேர் எதிரே வைக்காமல், தீப்பெட்டியை ஒரு மூடிய கப்போர்டு அல்லது அலமாரியிலோ வைப்பதே சிறந்தது. தவிர்க்க முடியாமல் பூஜை அறையிலேயே வைக்க நேரிட்டால், அதனை ஒரு சுத்தமான துணியால் சுற்றி வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், அப்பொருளில் உள்ள எதிர்மறை ஆற்றல் குறையும் என்று ஆன்மீக அறிஞர்கள் கூறுகின்றனர். விளக்குகள் அல்லது நெருப்பு தொடர்பான பொருட்களை எப்போதும் வீட்டின் தென்கிழக்கு மூலையில் (அக்னி மூலையில்) வைக்க முயலுங்கள்.

பக்தி என்பது வெறும் பிரார்த்தனை செய்வதோடு முடிந்துவிடுவதல்ல; அது நாம் இறைவனுக்கு அளிக்கும் மரியாதையையும் உள்ளடக்கியதாகும். பூஜை அறையைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பராமரிப்பதும், வாஸ்து விதிகளைப் பின்பற்றுவதும் ஆன்மீக அமைதியை மட்டுமல்லாமல், வீடு முழுவதற்கும் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொண்டு வந்து சேர்க்கும்.



## சினிமா துளிகள்..!

# 'துரந்தர் தி ரிவெஞ்ச்' சர்ச்சை.. மன்னிப்பு கேட்ட மாதவன்!



இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான துரந்தர் படம் 1000 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது. பாகிஸ்தானில் பணியாற்றும் இந்திய உளவாளியை பற்றிய கதைக்களத்தில் இப்படம் அமைந்திருந்தது. இதன் 2 ஆம் பாகமான துரந்தர் தி ரிவெஞ்ச் படம் கடந்த மார்ச் 19 இல் வெளியாகி முதல் படத்தை போல வரவேற்பை பெற்று வருகிறது. படத்தின் முதல் மற்றும் இரண்டாம் பாகத்தில் மாதவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

2 ஆம் பாகத்தில் ஒரு காட்சியில், மாதவன் கையில் சிகரெட்டுடன் சீக்கியர்களின் புனித நூலான 'குர்பானி' வசனங்களைப் படிப்பது போன்ற காட்சிகள் இடம்பெற்றிருந்தன.

இதற்கு சீக்கிய சமூகத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு, மும்பை காவல்துறையிலும் புகார் அளித்தனர்.

இந்த விவகாரம் குறித்து மனம் திறந்து பேசியுள்ள மாதவன், யாருடைய மனதையும் புண்படுத்தும் நோக்கம் தங்களுக்கு இல்லை என்று கூறி மன்னிப்பு கேட்டுள்ளார். அவர் கூறியதாவது, "அந்தக் காட்சியில் புனிதமான வசனங்க ளைப் பேசுவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்பே நான் சிகரெட்டை முழுமையாக அணைத்துவிட்டேன். இது ஒரு தவறான புரிதல் மட்டுமே. இயக்குநர் ஆதித்யா தார் இத்தகைய விஷயங்களில் மிகுந்த கவனம் செலுத்துபவர். அந்த வசனத்தைப் பேசும்போது கையில் சிகரெட் இருக்கக்கூடாது என்றும், வாயிலிருந்து புகை வரக்கூடாது என்றும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். ஒவ்வொரு படம் வெளியாவதற்கு முன்பும் நான் பொற்கோயிலுக்கு சென்று வழிபாடு நடத்துவது அனைவருக்கும் தெரியும். சீக்கிய மதத்தின் மீது எங்களுக்கு அளவற்ற மரியாதை உண்டு. தெரிந்தே யாருடைய உணர்வுகளையும் நாங்கள் காயப்படுத்தவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## தூங்குவதற்கு முன் இந்த மாத்திரைகளை சாப்பிடுறீங்களா..? இதை முதலில் தெரிஞ்சுக்கோங்க..!




முழுமையான ஆரோக்கியத்துடன் இருக்க, உடலுக்கு சில நுண்ணூட்டச்சத்துக்கள் தேவைப்படுகின்றன. இவற்றில் மிக முக்கியமானது மெக்னீசியம் ஆகும். இந்த கனிமம் 300–க்கும் மேற்பட்ட நொதி வினைகளுக்குப் பங்களித்து, தசைகள் மற்றும் நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டிற்கு உதவுகிறது. இது மனித உடலில் பல செயல்பாடுகளையும் செய்கிறது. இருப்பினும், பல்வேறு காரணங்களால், பலரின் உடலில் மெக்னீசியம் பற்றாக்குறை ஏற்படுகிறது. இது தூக்கமின்மை மற்றும் மனநிலை மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது. இந்தப் பிரச்சனையைத் தீர்க்க பலர் மெக்னீசியம் சப்ளிமெண்ட்டுகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு இவற்றை நாம் எடுத்துக்கொள்ளலாமா? மருத்துவ நிபுணர்கள் இப்போது என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்துகொள்வோம்.

மெக்னீசியத்தின் பங்கு: மெக்னீசியம் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துகிறது. இது மூளை மற்றும் உடலுக்கு ஒரு இயற்கையான தளர்வுப் பொருளாகச் செயல்பட்டு, தூக்கத்தை ஊக்குவிக்கிறது. இது நரம்பு மண்டலத்தைக் குளிர்விப்பதன் மூலமும், உடலின் உள் சுழற்சியை ஆதரிப்பதன் மூலமும் உடலின் முக்கிய வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குபடுத்துகிறது. இது காமா–அமினோபியூட்ரிக் அமிலம் (GABA) ஏற்பிகளுடன் பிணைந்து அவற்றைத் தூண்டுகிறது. இந்த ஏற்பிகள் நரம்புத் தளர்ச்சியைக் குறைப்பதிலும், குழப்பமான எண்ணங்களைத் தணிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதன் விளைவாக, மூளை அமைதியடைகிறது.

தூக்கம்–விழிப்பு சுழற்சியை நிர்வகிக்கும் மெலடோனின் என்ற ஹார்மோனின் உருவாக்கத்தில் மெக்னீசியம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. இது ஒரு இயற்கையான தசை தளர்த்தியாகச் செயல்பட்டு, அதிகப்படியான தசைச் சுருக்கங்களைத் தடுக்கிறது. இது கால் தசைப்பிடிப்பு அல்லது அமைதியற்ற கால்கள் நோய்க்குறி (RLS) போன்ற இரவு நேரப் பிரச்சனைகளைக் குறைக்கிறது. மறுபுறம், இது உடலின் மன அழுத்த எதிர்வினை அமைப்பைக் கட்டுப்படுத்த உதவுகிறது. இது மன அழுத்த ஹார்மோனான கார்டிசோல் வெளியாவதைத் தடுக்கிறது. இது இரவில் கார்டிசோல் அளவைக் குறைவாக வைத்திருக்கிறது. இது நீங்கள் விரைவாகத் தூங்குவதற்கு உதவுவது மட்டுமல்லாமல், தூக்கத்தின் தரத்தையும் தூக்க நேரத்தையும் மேம்படுத்துகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**தொடர்ச்சி முக்கியம்:**

மெக்னீசியம் சப்ளிமெண்ட்ஸை ஒரு முறை எடுத்துக்கொள்வது போதாது. சிறந்த முடிவுகளுக்கு அதைத் தவறாமல் எடுத்துக்கொள்வது நல்லது. ஒவ்வொரு இரவும் ஒரே நேரத்தில் அதை எடுத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் அதன் நன்மைகள் முழுமையாக உணரப்பட்டு, நல்ல தூக்கத்தை ஊக்குவிக்கும். தூக்கத்தின் தரத்தில் முன்னே ற்றத்தைக் காண குறைந்தபட்சம் 1 முதல் 4 வாரங்கள் ஆகலாம்.

எப்போது எடுத்துக்கொள்வது?: மெக்னீசியம் சப்ளிமெண்ட்ஸை எடுத்துக்கொள்வதற்கான சிறந்த நேரம் பல்வேறு காரணிகளைப் பொறுத்தது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். உடல் அமைப்பு, பிற மருந்துகளின் பயன்பாடு, தூங்கும் நேரம் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் ஆகியவை மெக்னீசியத்தின் நன்மைகளைப் பாதிக்கலாம். நல்ல உறக்கத்திற்காக சத்து மாத்திரைகளை எடுத்துக்கொள்ள நீங்கள் நினைத்தால், இரவில் உறங்கச் செல்வதற்கு முன்பு அவற்றை எடுத்துக்கொள்வதே சிறந்த நேரம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த நேரத்தில் மெக்னீசியம் சத்து மாத்திரைகளை எடுத்துக்கொள்வது உறக்கத்தின் தரத்தை மேம்படுத்தும் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இது தூக்கமின்மையைக் குறைத்து, தூக்கத்தின் கால அளவை அதிகரிக்கிறது.


தூங்குவதற்கு 30 முதல் 60 நிமிடங்களுக்கு முன்னதாக இவற்றை எடுத்துக்கொள்ளுமாறு வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர். இக்கால இடைவெளி உடலின் தளர்வுச் செயல்முறையைத் தூண்டுகிறது. சிலருக்கு, காலையில் எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த பலன்களைத் தருகிறது. காலையில் இவற்றை எடுத்துக்கொள்வது, நாள் முழுவதும் உடலைச் சுறுசுறுப்புடன் வைத்திருக்க உதவுவதுடன், பிற உடல்நலப் பயன்களையும் வழங்குகிறது. எனவே, இந்த உணவுகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஒரு மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது சிறந்தது.



திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் திருப்பூர் வடக்கு தொகுதியில் நிச்சயம் வெற்றி பெற்ற தர வேண்டும் என மாவட்ட பொறுப்பாளர் மேயர் தினேஷ்குமார் அறிவுறுத்தல் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற பூத் ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தில் தெரிவித்தார் இந்த கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் பகுதி செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்றனர்

# ரயில் டிக்கெட் விதிகளில் மேஜர் மாற்றம்: ஏப்ரல் 1 முதல்!





சென்னை, மார்ச். 25–

இந்திய ரயில்வேயில் பயணம் செய்யக்கூடிய லட்சக்கணக்கான ரயில் பயணிகளுக்கு மிக முக்கியமான ஒரு அறிவிப்பினை இந்திய ரயில்வே வெளியிட்டிருக்கிறது.ரயில் பயணிகள் தங்களுடைய உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டுகளை ரத்து செய்வதற்கான விதிமுறைகளும், போர்டிங் பாயிண்ட் விதிமுறைகளும் மாற்றப்பட்டுள்ளன.

வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரக்கூடிய இந்த மாற்றங்களை ரயில் பயணிகள் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. திருத்தி அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய ரயில் டிக்கெட் ரத்து விதிமுறையின் படி பயணிகள் தங்களுடைய ரயில் புறப்படுவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் தங்களின் உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டை ரத்து செய்யும்போது அவர்களுக்கு அதிகபட்ச பணம் ரீஃபண்ட் ஆக கிடைக்கும். அதாவதி டிக்கெட் ரத்துக்கான ஒரு குறிப்பிட்ட தொகை மட்டுமே அபராதமாக பெறப்படும்.

அதே வேளையில் 72 மணி நேரத்தில் இருந்து ரயில் புறப்படும் 24 மணி நேரத்திற்குள் டிக்கெட்டை ரத்து செய்யும்போது மொத்த டிக்கெட் கட்டணத்தில் 25% கழித்துக் கொள்ளப்படும், அதேபோல ரயில் புறப்படுவதற்கு 24 மணி நேரத்திலிருந்து 8 மணி நேரத்திற்குள் டிக்கெட்டை ரத்து செய்யும் போது டிக்கெட் கட்டணத்தில் 50 % அபராதமாக பிடித்துக் கொள்ளப்பட்டு மீதமுள்ள தொகை தான் ரீஃபண்ட் ஆக கிடைக்கும்.ரயில் புறப்படுவதற்கு 8 மணி நேரத்திற்கு முன்பு டிக்கெட்டை ரத்து செய்தால் எந்த ஒரு ரீஃபண்டும் கிடைக்காது என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்ததாக பயணிகள் தங்களுடைய போர்டிங் பாயிண்ட்டை மாற்றிக் கொள்வதற்கான வசதி கொண்டு வரப்பட்டிருக்கிறது. ரயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வரை பயணிகள் தங்களுடைய போர்டிங் பாயிண்ட் அதாவது தாங்கள் ரயில் ஏறக்கூடிய நிலையத்தை மாற்றிக் கொள்ளலாம். எழும்பூரில் ஏற முடியாதவர்கள் தாம்பரத்திற்கு மாற்றிக் கொள்ளலாம் கிண்டியில் ஏற முடியாதவர்கள் செங்கல்பட்டுக்கு மாற்றிக் கொள்ளலாம். அந்த வகையில் பயணிகளின் போர்டிங் பாயிண்ட் விதிமுறைகளும் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது. தற்போதைக்கு போர்டிங் பாயிண்ட் மாற்றம் என்பது சார்ட் தயாரிப்புக்கு முன்பு வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டு இருந்தது. தற்போது ரயில் புறப்படும் 30 நிமிடங்களுக்கு முன்பு வரை மாற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தரகர்கள் பலரும் முன் கூட்டியே பல்க்காக டிக்கெட்டை முன்பதிவு செய்துவிட்டு ரயில் புறப்படும் முன்பு திடீரென அதனை ரத்து செய்கிறார்கள். இதில் அதிக பணம் ரீஃபண்ட் கிடைப்பதால் இதனை வாடிக்கையாக கொண்டிருக்கிறார்கள் இதனால் சாதாரண மக்களுக்கு உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டுகள் கிடைப்பதில் சிக்கல் நீடிப்பதால் டிக்கெட் ரத்து விதிமுறைகளை மாற்றியுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதற்கு முன்பு ரயில் புறப்படும் 48 மணி நேரத்திற்கு முன்பு டிக்கெட்டை ரத்து செய்தால் ஒரு டிக்கெட்டுக்கு தலா 180 ரூபாய் மற்றும் ஜிஎஸ்டி (டிக்கெட்டை வகுப்பை பொறுத்து மாறும்) பிடித்தம் செய்யப்படும், இது இப்போது 72 மணிநேரம் முன்பு என மாற்றப்பட்டுள்ளது. இதற்கு முன்பு ரயில் புறப்படும் 4 மணி நேரம் முன்பு வரை டிக்கெட் ரத்து செய்யப்பட்டால் கூட 50% தொகை ரீஃபண்ட் கிடைக்கும், ஆனால் இப்போது 8 மணி நேரம் முன்பு வரை என மாற்றப்பட்டுள்ளது.

# தேன்கூடு ஈரான்.. பாகிஸ்தான் வரும் அமெரிக்க ‘மாப்பிள்ளை’!



அமெரிக்கா, மார்ச். 25–

கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது இஸ்ரேல் அமெரிக்கா ஆகிய நாடுகள் தாக்குதல் நடத்தின. தேன் கூட்டில் கைவைத்ததை உணர்ந்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஹார்முஸ் நீரிணையை திறக்காவிட்டால் அங்குள்ள எரிசக்தி அமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்தார். இதற்கு பதிலளித்த ஈரான், வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், மின்சார அமைப்புகள், கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்துவோம் என தெரிவித்தது. போர் உக்கிரமாக நடப்பதால், மத்தியஸ்த நாடுகள் மூலம் ஈரானுடன் தொடர்பு கொண்டு அமெரிக்கா பேச்சுவார்த்தை முயற்சிகளை தீவிரமாக்கி உள்ளது. அதேநேரம் வளைகுடா நாடுகள் இந்த போருக்கு எதிராக அதிருப்தியில் உள்ளன.

இதனால் வளைகுடா நாடுகளுக்கு பதில் அமெரிக்கா, தனது நட்பு நாடான பாகிஸ்தானின் உதவியை நாடி வருகிறது. பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீருடன் டிரம்ப் தொலைபேசியில் பேசி, அமைதி பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புகளை ஆராய்ந்திருக்கிறார்.

**அமெரிக்க மாப்பிள்ளை**

மேலும், டிரம்ப் தனது சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் மற்றும் மருமகன் ஜாரெட் குஷ்னர் மூலமாக ஈரான் அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருகிறார். விரைவில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் உள்ளிட்டோர் ஈரான் அதிகாரிகளை சந்திக்கும் வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மதுரை சித்திரை திருவிழா: கோயில் நிர்வாகம் அறிவுறுத்தல்!



மதுரை, மார்ச். 25–

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு, கோயிலை சுற்றியுள்ள வீதிகளில் அமைக்கப்படும் பந்தல்கள் 30 அடி உயரத்திற்கு மேல் இருக்க வேண்டும் என கோயில் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கோயில் இணை ஆணையர் நா. சுரேஷ் மற்றும் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் தெரிவித்ததாவது:

சித்திரைப் பெருவிழா ஏப்ரல் 19 முதல் ஏப்ரல் 30 வரை நடைபெற உள்ளது. விழா நாட்களில் மீனாட்சி சுந்தரேசுவரர் பஞ்சமூர்த்திகளுடன் தினமும் காலை, இரவு என இரு வேளைகளில் நான்கு மாசி வீதிகளில் புறப்பாடு நடைபெறும். இதனால், கோயிலைச் சுற்றியுள்ள விட்டவாசல், அம்மன் சன்னதி தெரு மற்றும் நான்கு மாசி வீதிகளில் உள்ள வியாபாரிகள், கடைக்காரர்கள் அமைக்கும் பந்தல்கள் மற்றும் வேப்பிலைத் தோரணங்கள், சுவாமி புறப்படும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு குறைந்தது 30 அடி உயரத்திற்கு மேல் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இறைவனுக்கு கேந்தி பூ மற்றும் மருதை வேர்கள் கொண்ட மாலைகளை தவிர்த்து, உகந்த மாலைகள் மட்டும் சாத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 28–ஆம் தேதி நடைபெறும் திருக்கல்யாணத்தை முன்னிட்டு, மூலஸ்தான மற்றும் உற்சவர் அம்மன், சுவாமிக்கு கோயில் நிர்வாகம் சார்பில் மட்டுமே பட்டு பரிவட்டங்கள் சாத்தப்படும். பக்தர்கள் வழங்கும் பரிவட்டங்கள் வாமாலையாக மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

அன்றைய தினம் பக்தர்களுக்கு இலவசமாக தண்ணீர் பாட்டில்கள், பிஸ்கட், மஞ்சள்கயிறு, குங்குமப் பாக்கெட்டுகள் உள்ளிட்ட பொருட்களை வழங்க விரும்பும் நன்கொடையாளர்கள், கோயில் அலுவலகத்தில் நேரடியாக வழங்கி உரிய ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனிநபர்கள் அல்லது பிற அமைப்புகள் மூலம் வழங்க வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் தகவல்களுக்கு கோயில் நிர்வாக அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உயிரி தொழில் நுட்ப ஆராய்ச்சியாளர்களுக்கு இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை!

மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறை சார்பில் உயிரி தொழில் நுட்ப ஆராய்ச்சி மாணவ மாணவிகளுக்கு இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்கும் உயிரி தொழில் நுட்ப படிப்பு சேர்க்கைக்கும் உயிரி தொழில் நுட்ப தகுதி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். இதற்கு https://nta.ac.in 5 *09–04–2026 தேதிக்குள் விண்ணப்பிக்க 17–05–202 தேதி நடக்க உள்ளது.

## புதுக்கோட்டை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் வாகன ஏல அறிவிப்பு

புதுக்கோட்டை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் பயன்படுத்தப்பட்டு கழிவு செய்யப்பட்ட Ambassador Car bearing Registration No. TN 55 G 0212 என்ற வாகனம் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் வரும் **26.03.2026** தேதி வியாழக்கிழமை மாலை 5:00 மணிக்கு புதுக்கோட்டை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வைத்து பொது ஏலம் விடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. மோட்டார் தொழில் நுட்ப வல்லுநரால் குறைந்தபட்ச ஏல நிர்ணயம் செய்த தொகை ரூ.25,000/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஏலம் எடுக்க விரும்புவோர் **25.03.2026** தேதி காலை **10:30** மணி மாலை **5:30** மணி வரை மேற்படி முகவரில் நிறுத்தி வைக்கப்பட்ட மேற்படி வாகனத்தை பார்வையிட்டுக் கொள்ளலாம். வாகனத்தை ஏலம் எடுக்க விருப்பம் உள்ளவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள 26.03.2026 தேதியன்றே காலை **10:00 மணி முதல் பிற்பகல் மதியம் 1:30 மணி வரை, ரூ.2,000/- முன்பணம் செலுத்தி தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.** பதிவு செய்தவர்கள் மட்டுமே ஏலம் எடுக்க அனுமதிக்கப் படுவார்கள். ஏலம் எடுத்தவுடன் முழுத்தொகை மற்றும் அதற்கான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி 18 (%) சதவீதம் (GST 18%) முழுவதையும் அரசுக்கு அன்றே ரொக்கமாக செலுத்தி வாகனத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
புதுக்கோட்டை.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## SIDBI – இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி–14 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: சிட்பி (SIDBI) இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கி

அறிவிப்பு எண்: 15/2025–26

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 14 சிறப்பு அலுவலர் பணியிடங்கள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 18.03.2026

கடைசி தேதி: 07.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.sidbi.in/

## நியூக்ளியர் பவர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் –337 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: நியூக்ளியர் பவர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட், கக்ரபார்

அறிவிப்பு எண்: கக்ரபார் குஜராத் தளம்/ மனிதவள மேலாண்மை/ தொழிற்பயிற்சி–2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: தொழிற்பயிற்சி

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 337 டிரேட் அப்ரண்டிஸ், டெக்னீசியன் அப்ரண்டிஸ், கிராஜுவேட் அப்ரண்டிஸ் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: கக்ரபார், குஜராத்

தொடங்கும் தேதி: 20.03.2026

கடைசி தேதி: 06.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.npcil.nic.in/

## இந்தியா ஆப்டெல் லிமிடெட்–77 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: IOL இந்தியா ஆப்டெல் லிமிடெட்

அறிவிப்பு எண்: IOLHqrs/100(2)/2026–Rectt

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிலையான கால ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 77 இளநிலை திட்டப் பொறியாளர் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: டேராடூன்

தொடங்கும் தேதி: 14.03.2026

கடைசி தேதி: 03.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ddpdoo.gov.in/

## பாண்டிச்சேரி பல்கலைக்கழக காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: புதுச்சேரி பல்கலைக்கழகம்

அறிவிப்பு எண்: PU/RC/NT/2026/51

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 18 துணைப் பதிவாளர், உதவிப் பதிவாளர், மக்கள் தொடர்பு அதிகாரி, பிரிவு அதிகாரி, தனிச் செயலாளர் பணியிடங்கள்

பணியிடமிருக்கும் இடம்: புதுச்சேரி

தொடங்கும் தேதி: 10.03.2026

கடைசி தேதி: 10.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.pondiuni.edu.in/

## உயர் வெடிபொருள் தொழிற்சாலை – 91 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: உயர் வெடிபொருள் தொழிற்சாலை

அறிவிப்பு எண்: மேற்பார்வைப் பணியாளர் (ரசாயனம்), திறன்மிகு பணியாளர் (AOCP)

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

கால அளவு: 04 ஆண்டுகள் (நீட்டிக்கப்படக்கூடியது)

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 91 மேற்பார்வைப் பணியாளர் (ரசாயனம்), திறன்மிகு பணியாளர் (AOCP) பணியிடங்கள்

பணியிட முகவரி: கட்கி, புனே, மகாராஷ்டிரா

தொடங்கும் தேதி: 21.03.2026

கடைசி தேதி: 10.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ddpdoo.gov.in/

## சென்னை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி–40 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மெட்ராஸ்

அறிவிப்பு எண்: IITM/R/1/2026, தேதி: 27.02.2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 40 உதவிப் பேராசிரியர் (தரம் II), உதவிப் பேராசிரியர் (தரம் I) பணியிடங்கள்

பணியிட மாற்றம்: சென்னை

தொடங்கும் தேதி: 27.02.2026

கடைசி தேதி: 27.03.2026

விண்ணப்பிக்கும் முறை: இணையவழி

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://facapp.iitm.ac.in/





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## முதல் கட்டமாக 23 பெயர் கொண்ட அதிமுக வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

சென்னை, மார்ச். 25–

அதிமுக வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. முதல் கட்டமாக 23 பெயர் கொண்ட பட்டியலை அதிமுக





பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளாா்

தமிழக சட்டமன்ற தேர்தல் அதிமுக சார்பாக போட்டியிடவுள்ள முதல்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது.

எடப்பாடி – எடப்பாடி K. பழனிசாமி

வேப்பனஹள்ளி கே.பி. முனுசாமி

திண்டுக்கல் திண்டுக்கல் சீனிவாசன்

நத்தம் நத்தம் விசுவநாதன்

தொண்டாமுத்தூர் – எஸ்.பி. வேலுமணி

குமாரபாளையம் பி. தங்கமணி

ராயபுரம் டி. ஜெயக்குமார்

மைலம் சி.வி. சண்முகம்

மதுரை மேற்கு திரு. செல்லூர் K. ராஜு

பாலக்கோடு –கே.பி. அன்பழகன்

நன்னிலம்– ஆர். காமராஜ்

வேதாரண்யம் – ஓ.எஸ். மணியன்

விராலிமலை டாக்டர் சி. விஜயபாஸ்கர்

கோவில்பட்டி – கடம்பூர் C. ராஜூ,

திருமங்கலம் – ஆர்.பி. உதயகுமார்

சிவகாசி (205) கே.டி. ராஜேந்திரபாலாஜி

மதுரவாயல்– பென்ஜமின்

கலசபாக்கம் – அக்ரி கிருஷ்ணமூர்த்தி

திருப்பரங்குன்றம் – வி.வி. ராஜன் செல்லப்பா

பவானி– கே.சி. கருப்பணன்

ஜோலார்பேட்டைகே.சி. வீரமணி

கரூர் – எம்.ஆர். விஜயபாஸ்கர்

அரியலூர் – தாமரை எஸ். ராஜேந்திரன்

## தியாகமா; தந்திரமா: கமல் முடிவுக்கு காரணம் என்ன?

புதுடெல்லி, மார்ச். 25–

கமல்ஹாசனுக்கு ஒரு ராஜ்ய சபா சீட் கொடுத்து அமுக்கியது போதும் என திமுக நினைத்து விட்டது போலும் அதனாலயே




உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுங்கள் என மக்கள் நீதி மய்யத்திற்கு திமுக அழுத்தம் கொடுத்தது. அந்த அழுத்தத்தின் வெப்பத்தை உணர்ந்து கொண்ட கமல் தன் விருப்பமின்மையை வெளிப்படுத்தும் வகையில் 'தேர்தலிலேயே போட்டியிடவில்லை' என்று ஜகா வாங்கிவிட்டார்.

இந்த 'டுவிஸ்ட்' யாரும் எதிர்பாராதது. இது, கமலின் தந்திரமான, புத்திசாலித்தனமான முடிவு, என்று சிலரும், தேர்தலில் போட்டியிடாத கட்சி, களத்தில் இருந்து காணாமல் போகும் என்று சிலரும் சுட்டிக்காட்டுகின்றனர். திமுகவின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் மநீமவுக்கு பெரிய பெயர் கிடைக்கப் போவதில்லை. அந்த ஓட்டுகளும் திமுகவின் கணக்கில் தான் ஏறும். அதை கமல் தடுத்துவிட்டார் என்கிறார்கள் கமல் முடிவை ஆதரிப்பவர்கள்.

முன்பு மதிமுக இதே போன்ற தவறை செய்ததால் கரைந்து போனது என்கின்றனர் கமல் முடிவை எதிர்ப்பவர்கள். எதுஎப்படியோ, டார்ச் லைட்டை எரிய விடாதபடி உதயசூரியன் சுட்டுவிட்டது. கமல் முடிவால், மநீமவுக்கு கொடுக்கலாம் என்று வைத்திருந்த 2 தொகுதிகள் திமுகவுக்கு மிச்சம். ஏற்கனவே தேமுதிகவுக்கு 10, விசி–க்கு 8 தொகுதிகளை கொடுத்து விட்டு, விழித்துக்கொண்டு இருந்த திமுகவுக்கு 2 தொகுதிகளை பரிசாக'கொடுத்து திமுகவை திக்கு முக்காட வைத்திருக்கிறார் கமல். இப்படி ஒரு முடிவை எடுப்பதற்கு, எதற்காக மூன்று கட்ட பேச்சு நடத்த வேண்டும்; விருப்பத் தொகுதி பட்டியல் தர வேண்டும், முந்தைய தேர்தலில் வாங்கிய ஓட்டு எண்ணிக்கை விவரம் தர வேண்டும்' என்று புலம்பிக் கொண்டிருக்கின்றனர், பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட கமல் கட்சி நிர்வாகிகள். கமல் முடிவை தியாகம் என்கிறார் முதல்வர்; 'அவருக்கு லாபம்; அப்படித்தான் சொல்வார். தியாகமா, தந்திரமா என்பதை காலம் தான்' சொல்லும் என்கின்றனர் நெட்டிசன்கள்.

## ஜனநாயகம் இன்று பணநாயகமாக மாறியுள்ளது – சீமான்!

திருப்பத்தூர், மார்ச். 25–

திருப்பத்தூர் பகுதியில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரசாரம் செய்தார். அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:–

போக்குவரத்து துறைக்கு ரூ.1 லட்சம் கோடி கடன் உள்ளது. மின் துறைக்கும் கடன் உள்ளது. கல்வித் தரம் உயர்த்தப்படவில்லை.

மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படவில்லை. சாலைகள் சரிவர அமைக்கப்படவில்லை. உள்ளூர் உற்பத்திகளை ஆதரிக்காமல், வெளி ஊர்களில் இருந்து வாங்கி விற்பனை செய்கிறார்கள். இதற்கு மேலாக கட்டண உயர்வு, சொத்து வரி போன்றவற்றை உயர்த்தி பொதுமக்களுக்கு சுமை சேர்த்துள்ளனர்.

இப்படிப்பட்ட அரசை மாற்ற வேண்டும் என்பதே எங்களின் நோக்கம்.

தமிழகத்தில் ஆளும் கட்சிகள் தேர்தலின்போது பணம் வழங்கி வாக்குகளை பெற முயலுகின்றன.



"இலவசம்" என்ற பெயரில் மக்களை ஏமாற்றுகின்றனர்.

நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வந்தால் இலவசங்கள் என்ற நடைமுறை இருக்காது. ஆனால், பொதுமக்களின் அடிப்படை தேவையான குடிநீர் அனைவருக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாங்கள் நிறுத்தும் வேட்பாளர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் நடுத்தர நிலையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மக்கள் நலனுக்காக பணியாற்றுவார்கள். மக்களுக்கு உண்மையாக நல்லது செய்யக் கூடியவர்களையே முன்னிறுத்துகிறோம்.

நாட்டு மக்களுக்கு எது சரியான திட்டம் என்பதை அவர்கள் உணர்ந்தால், இந்த அரசியல் களத்தில் நாம் தமிழர் கட்சி மட்டுமே இருக்கும். அவர்கள் தங்களை திராவிடர்கள் என்று கூறுகிறார்கள்.

நாங்கள் தமிழர்கள் என்று கூறுகிறோம். அவர்கள் இருமொழிக் கொள்கையை ஆதரிக்கிறார்கள். நாங்கள் ஒரே மொழி தமிழ் என்ற கொள்கையை முன் வைக்கிறோம். பணத்திற்கு வாக்கு வாங்கும் அரசியல் நிலவி வருகிறது.

மாண்புமிக்க ஜனநாயகம் இன்று பணநாயகமாக மாறியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## திருவாரூரில் முதல்வர் பரப்புரை!

சென்னை, மார்ச். 25–

2026 சட்டமன்ற தேர்தல்: ஏப்.2–ம் தேதி திருவாரூரில் பரப்புரையைத் தொடங்குகிறார் திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின்.

## தவெக வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்!



சென்னை, மார்ச். 25–

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வரும் மார்ச் 27–ல் மாமல்லபுரத்தில் விஜய் தலைமையில் முதற்கட்டமாக 110 வேட்பாளர்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளனர். இருப்பினும், 60–க்கும் மேற்பட்ட தொகுதிகளுக்கான வேட்பாளர்களைத் தேர்வு செய்வதில் இழுபறி நீடிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வேட்புமனுத் தாக்கல் தொடங்கவுள்ள நிலையில், தவெக–வின் இந்த அறிமுகக் கூட்டம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## புதிய கட்சி தொடங்கிய ராமதாஸ்?



சென்னை, மார்ச். 25–

மார்ச் 30–ல் வேட்புமனு தாக்கல் தொடங்கவுள்ள நிலையில், 'அய்யா பாசறை மக்கள் கட்சி' (அய்யா பாமக) என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய கட்சியில் போட்டியிட ராமதாஸ் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இக்கட்சி அவரது தலைமை நிலையச் செயலாளர் அன்பழகனின் மகன் முகிலன் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பழ. நெடுமாறனுக்கு ஸ்டாலின் நன்றி!



சென்னை, மார்ச். 25–

மண், மொழி, மானம் காத்திட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள அய்யா பழ. நெடுமாறன் அவர்களுக்கு நன்றி! தமிழு ணர்வை நெஞ்சில் ஏந்திக் களமாடுவோம்; தமிழ்நாட்டைச் சூழும் பேராபத்தை முறியடித்து வாகை சூடுவோம்! என கூறியுள்ளார்.

## 262 நட்சத்திர பேச்சாளர்களுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதி!




சென்னை, மார்ச். 25–

தமிழ்நாட்டில் இதுவரை 262 நட்சத்திர பேச்சாளர்களுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு தலா 40, பதிவு செய்த கட்சிகளுக்கு தலா 20 நட்சத்திர பேச்சாளர்கள் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 32 தொகுதிகளில் களம் காணும் தாமரை சின்னம்!




சென்னை, மார்ச். 25–

2026 சட்டமன்றத் தேர்தலில் தாமரை சின்னம் களம் காணும் தொகுதிகளின் எண்ணிக்கை 32 ஆனது

பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் தமாகாவும் தாமரை சின்னத்தில் 5 இடத்தில் போட்டியிடுகிறது. இதனால் பாஜகவின் தாமரை சின்னம் போட்டியிடும் தொகுதி எண்ணிக்கை 32 ஆனது.

## ஒரே தொகுதியில் வீரப்பனின் மனைவி–மகள் போட்டியா..?



மேட்டூர், மார்ச். 25–

மேட்டூர் சட்டசபை தொகுதி நாம்தமிழர்கட்சி வேட்பாளர் சந்தன கடத்தல் வீரப்பன் மகள் வித்யா நேற்று மேட்டூர் அணைக்கட்டு முனியப்பன் கோவிலில் பொங்கல் வைத்து. சிறப்பு வழிபாடு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, எனது அரசியல் ஈடுபாட்டின் காரணமாக, மேட்டூர் தொகுதி நா.த.க. வேட்பாளராக போட்டியிடுகிறேன். மேலும் இந்த பகுதி மக்களை சந்தித்து எங்களது கட்சிக்கு ஆதரவு திரட்டி வருகிறேன் என்றார்.

இதனைத்தொடர்ந்து உங்களுடைய தாயும் (வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி), நீங்களும் ஒரே தொகுதியில் போட்டியிட உள்ளீர்களா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதில் அளிக்கையில், நானும், என் தாயாரும் தமிழ்தேசியம் என்ற ஒரே கொள்கையை பின்பற்றி வருகிறோம். அவர் மேட்டூர் சட்டசபை தொகுதியில் போட்டியிடவில்லை. மற்றொரு தொகுதியில் போட்டியிடுவது குறித்து அவர் சார்ந்துள்ள கட்சி தான் முடிவு செய்யும் என்றார்.





## வேட்பாளர்களை ஆதரித்து 'ரோடு ஷோ'... ஏப்.3 புதுவை வரும் மோடி!

புதுச்சேரி, மார்ச். 25–

புதுவை பா.ஜ.க சார்பில் தேர்தல் அலுவலகம் திறப்பு நிகழ்ச்சி தனியார் ஓட்டலில் நேற்று மாலை நடந்தது. நிகழ்ச்சியில் மத்திய அமைச்சரும், தேர்தல் பொறுப்பாளருமான மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டு தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார். இதில் மாநில தலைவர் வி.பி. ராமலிங்கம், சபாநாயகர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் நிருபர்களிடம் கூறியதாவது:–

புதுவையில் பா.ஜ.க–வின் 10 சிறந்த வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எந்தவித சலசலப்பும் இல்லாமல் எங்களின் கூட்டணி சென்று கொண்டிருக்கிறது. பா.ஜ.க மிகவும் கட்டுக் கோப்போடு செயல்படுகிறது. 27–ந் தேதி முதல் 29–ந் தேதி வரை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தேசிய தலைவர் நிதின் நபின், முன்னாள் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோர் புதுவை வருகை தர உள்ளனர். ஏப்ரல் 3–ஆம் தேதி பிரதமர் மோடி தலைமையில், வேட்பாளர்களை ஆதரித்து 'ரோடு ஷோ' நடக்கிறது. எங்களது கடமை புதுவை சட்டசபை தேர்தலில் சிறப்பான கூட்டணியை அமைத்துள்ளோம். ஒர் அணியை சேர்ந்த காங்கிரஸ்– தி.மு.க.வினர் ஒருவருக்கொருவர் நம்பிக்கை

இல்லாமல் இப்போதே யார் முதலமைச்சர், அமைச்சர்கள் என பேசி வருகின்றனர். ஆனால் புதுவை மாநில நலனை மட்டும் கருத்தில் கொண்டு பா.ஜ.க –என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணி அமைத்துள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசை மீண்டும் கொண்டு வந்து மக்களுக்கு எண்ணற்ற நலத்திட்டங்களை கொடுப்பது தான் எங்களது கடமை என்றார்.

## சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ்–அப் ஆதாரம் போதும்: அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு!

சென்னை, மார்ச். 25–

மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

மக்களை தொல்லை செய்யக்கூடாது என பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணத்திற்காக பொதுமக்கள்



ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை வாட்ஸ்–அப்பில் கூட காண்பிக்கலாம்; அவ்வாறு காண்பித்தால் பணம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரூ.50,000க்கு மேல் அனுமதிக்கவேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது; தமிழகத்தில் எப்போதும் நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவும் மிகக் குறைவாகவே இருக்கிறது. வெறுப்பு பிரசாரங்களை கண்காணிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## லேப்டாப் எங்கே? தேடும் எம்.எல்.ஏ.,க்கள்!

சென்னை, மார்ச். 25–

சட்டசபையில், காகித பயன்பாட்டை குறைக்கும் வகையில், கடந்த 2021 தேர்தலில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ.,க்கள் ஒவ்வொருவருக்கும், டிஜிட்டல்மயமாக்கல் திட்டத்தின் கீழ், சட்டசபை செயலகம் சார்பில், லேப்டாப் வழங்கப்பட்டது. இதனை, பலர், தங்கள் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி விட்டு, பின், பழுது காரணமாக ஓரம் கட்டி விட்டனர்.

தற்போது, தேர்தலில் மீண்டும் போட்டியிடும் எம்.எல்.ஏ.,க்கள், தங்கள் பெயரில் எந்தவித அரசு பொருளும் இல்லை என்பதை, வேட்பு மனுவில் குறிப்பிட்டு அதற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த உடன், தங்கள் அலுவலகங்களை அரசிடம் ஒப்படைத்தனர்.

ஆனால், சட்டசபை செயலகம் வழங்கிய லேப்டாப்பை மறந்தே விட்டனர்.

தலைமை செயலகத்தில் 'நிலுவையில்லா சான்று' கேட்டபோது, 2021ல் வழங்கிய லேப்டாப்பை கொண்டு வந்தால் மட்டுமே சான்று வழங்கப்படும் என பதில் வந்துள்ளது.

அதிர்ச்சியடைந்த பல எம்.எல்.ஏ.,க்கள், லேப்டாப்பை வீட்டில் எங்காவது வைத்தோமா அல்லது உற்றார், உறவினர்களிடம் கொடுத்தோமா என தேடி வருகின்றனர்.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020